மத்திய குழுவிடம் வெள்ள சேத விவரங்களை முதல்வர் ஸ்டாலின் அளித்தார்.

‘பெஞ்ஜல்’ புயல் பாதித்த பகுதிகளை பார்வையிட வந்த

மத்திய குழுவிடம் ரூ.6,675 கோடி சிறப்பு நிதி வழங்க ஸ்டாலின் வலியுறுத்தல்

சென்னை, டிச.7

தமிழ்நாட்டில் ‘பெஞ்ஜல்’ புயலால் பாதித்த பகுதிகளை பார்வையிட மத்தியக்குழு நேற்று சென்னை வந்தது. அந்தக்குழுவிடம் ரூ.6,675 கோடி சிறப்பு நிதி வழங்க வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார்.

தமிழகத்தில் ‘பெஞ்ஜல்’ புயல் காரணமாக அதிக கனமழை பெய்ததால் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட 14 மாவட்டங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதோடு பெரும் சேதத்தையும் உண்டாக்கியது.

இது தொடர்பாக பிரதமர் மோடிக்கு, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 2ந் தேதி ஒரு கடிதம் எழுதினார்.

அதில் மத்திய அரசின் பல்துறை குழுவை அனுப்பி சேத விவரங்களை கணக்கிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்த நிலையில் தமிழக வெள்ள சேதங்களை நேரில் பார்வையிட மத்தியக்குழு நேற்று மாலை சென்னை வந்தது.

இந்த குழுவில் மத்திய உள்துறை அமைச்சக பேரிடர் மேலாண்மை இணை செயலாளர் ராஜேஷ் குப்தா, மத்திய விவசாய மற்றும் உழவர் நலத்துறை இயக்குனர் பொன்னுசாமி, மத்திய நிதித்துறை இயக்குனர் சோனாமணி அவுபம், மத்திய ஜல்சக்தி துறை இயக்குனர் சரவணன், மத்திய சாலை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை முன்னாள் பொறியாளர் தனபாலன் குமரன், எரிசக்தித் துறை உதவி இயக்குனர் ராகுல் பாட்ச்கேட்டி, ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் இயக்குனர் பாலாஜி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்த குழுவினர் நேற்று மாலை சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பேசினர்.

அப்போது அவர், ‘தமிழகத்தில் வெள்ளப்பாதிப்பால் ஏற்பட்ட பேரழிவிற்கு தற்காலிக மற்றும் நிரந்தர மறுசீரமைப்பு பணிகளுக்கு ரூ.6,675 கோடி நிதி வழங்க வேண்டும் என்று கூறி அதற்கான முழு விவரங்கள் அடங்கிய கோரிக்கை மனுவை அளித்தார்.

மேலும், அவர் மத்தியக்குழுவிடம் தமிழ்நாட்டிற்கு தேவையான நிவாரணப் பணிகள், நிரந்தர மற்றும் தற்காலிக மறு சீரமைப்பு பணிகளுக்காக நிதியினை பெற்றுத்தர விரைந்து பரிந்துரை செய்திட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, தலைமை செயலகத்தில் ஆய்வு கூட்டம் நடந்தது. அதில் கலந்து கொண்ட மத்தியக் குழுவினரிடம், தமிழக அரசின் தலைமை செயலாளர் முருகானந்தம், வருவாய் நிர்வாக ஆணையர் ராஜேஷ் லக்கானி ஆகியோர் பெஞ்ஜல் புயலால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து படக்காட்சிகள் மூலம் விளக்கினர். இந்த மத்தியக் குழுவினர் 2 நாள்கள் தமிழகத்தில் வெள்ள பாதிப்பு ஏற்பட்ட விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு சென்று ஆய்வு செய்கின்றனர்.

சென்னை ஐ.ஐ.டி. மாணவருக்கு ரூ.4.30 கோடி சம்பளத்தில் வேலை

சென்னை, டிச.7

சென்னை ஐ.ஐ.டி.யில் படித்த மாணவர்களுக்கான கேம்பஸ் பிளேஸ்மென்ட்நிகழ்வுநடைபெற்றது. இதில், சென்னை ஐ.ஐ.டியில் படித்த மாணவர் ஒருவருக்கு ஆண்டுக்கு ரூ.4.30 கோடி சம்பளத்தில் வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. இது சென்னை ஐ.ஐ.டி பிளேஸ்மென்ட் வரலாற்றிலேயே முதல் முறையாக பார்க்கப்படுகிறது. பிரபல வால் ஸ்ரீட் வர்த்தக நிறுவனமான ஜேன் ஸ்ரீட் நிறுவனம் அந்த மாணவருக்கு மாதம் ரூ.35.80 லட்சம் சம்பளத்துடன் வேலைவாய்ப்பு வழங்கி உள்ளது. அதேபோல், பிளாக் ராக், கிளீன், டான்வின்சி போன்ற பிரபல நிறுவனங்களும் பல மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.1 கோடி முதல் ரூ.2 கோடி வரையில் சம்பளத்துடன் வேலைவாய்ப்பு வழங்கி உள்ளது.

NOTIFICATION FOR EXPRESSION OF INTEREST FOR RE POWER PROCUREMENT in TN for SHORT TERM BASIS (1year)

Dalmia Cement (Bharat) Ltd. (Address: 11th & 12th Floors, Hansalaya Building, 15, Barakhamba Road, New Delhi, 110001)

Invitation for Expression of Interest: Dalmia Cement (Bharat) Ltd. invites qualified and experienced developers to submit Expressions of Interest (EOI) for the supply of monthly 50 Lakhs units of RE Power under Group Captive mode / 3rd party mode. This initiative is specifically for our Cement plants located at three different locations in the state of Tamil Nadu.

Eligibility Criteria: Interested developers with a proven track record and operating Solar & Wind power plants within the state of Tamil Nadu, are invited to submit their EOIs.

Submission Address: Mr. Gaurav Kapoor (Address: 2nd Floor, Berger Tower, Sector 16B, Noida, Uttar Pradesh 201301) Email: Kapoor.gaurav@dalmiabharat.com

Important Dates: EOI Submission deadline - 15th Dec 24

Dalmia Cement (Bharat) Ltd. reserves the right to reject any or all EOIs without assigning any reasons.

Thank you for your interest in partnering with Dalmia Cement (Bharat) Ltd. for this renewable energy initiative.

Sincerely,

Dalmia cement

அனைத்து வேளாண் விளைபொருட்களும் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல்: மத்திய அரசு அறிவிப்பு

புதுடெல்லி, டிச.7–

அனைத்து வேளாண் விளை பொருட்களும் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்படும் என மத்திய அரசு அறிவித்து உள்ளது.

விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்ய வேண்டும் என மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். குறிப்பாக குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டப்பூர்வ உத்தரவாதம் கேட்டு அவர்கள் தொடர் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

நாடாளுமன்றமாநிலங்களவையில் துணைக்கேள்விகளுக்கு பதிலளித்த போது வேளாண் அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் கூறியதாவது:– விவசாயிகளின் அனைத்து விளைபொருட்களும் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்படும் என இந்த அவையில் உறுதியளிக்க விரும்புகிறேன். மோடியின் உத்தரவாதத்தை நிறைவேற்றுவதற்கான உத்தர வாதம்தான் இது. அதேநேரம் மறுபுறம் உள்ள நமது நண்பர்கள் தங்கள் ஆட்சியின்போது, எம்.எஸ்.சுவாமிநாதன் கமிஷன் பரிந்துரைகளை, குறிப்பாக விளைபொருட்களின் விலையை விட 50 சதவீதம் கூடுதலாக வழங்க வேண்டும் என்பதை ஏற்க முடியாது என்று அறிவித்தார்கள். அதற்கான ஆதாரம் என்னிடம் உள்ளது. அவர்கள் ஒருபோதும் விவசாயிகளை மதித்ததில்லை. அவர்களின் நியாயமான கோரிக்கைகளை கவனத்தில் கொள்ளவில்லை.

ஆனால் 2019ம் ஆண்டு முதல் விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவில் 50 சதவீத லாபம் அளித்து குறைந்தபட்ச ஆதரவு விலையை கணக்கிட பிரதமர் மோடி முடிவு செய்துள்ளார் என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். நெல், கோதுமை, சோளம், சோயாபீன்ஸ் ஆகியவை 3 ஆண்டுகளுக்கு முன்பே உற்பத்திச் செலவை விட 50 சதவீதம் அதிகமாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. அந்தவகையில் மோடி அரசு ஏற்கனவே விவசாயிகளுக்கு லாபகரமான விலை கொடுத்து வருகிறது. மேலும் பொருட்களின் விலைகள் குறையும் போதெல்லாம் ஏற்றுமதி வரிகள் மற்றும் விலைகளை மாற்றியமைத்து விவசாயிகளுக்கு உதவி வருகிறது என்றார்.

மாண்புமிகு மாநில நுகர்வோர் குறைத்தீர்ப்பு ஆணையம், சென்னை

மேல் முறையீட்டு எண்.544/2024

1. RBLவங்கி லிமிடெட்., அதன் மண்டல கிளை மேலாளர், மற்றும் ஒருவர். ...மேல்முறையீட்டாளர்கள்

எதிர்

ராமசந்திரன் ...எதிர்மனுதாரர்

பெறுநர், திரு.Sராமசந்திரன், த/பெ.திரு.Sசீனிவாசன், நெ.656, தெற்கு காட்டுகோட்டை, தெங்கியாநாதம், கள்ளகுறிச்சி-606201.

ஐயா,

மேற்கண்ட மேல் முறையீடு தங்களுக்கெதிராக மாண்புமிகு மாநில நுகர்வோர் குறைத்தீர்ப்பு ஆணையம், சென்னை யில், மேற்படி மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்டு, அம்மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை வருகிற **19.12.2024** தங்களின் வருகைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது.

ஆகவே வருகிற **19.12.2024** அன்று காலை 10.30 மணியளவில் தாங்கள் மாண்புமிகு மாநில நுகர்வோர் குறைத்தீர்ப்பு ஆணையம், சென்னை முன்பு நேரடியாகவோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ தவறாமல் ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி மேல் முறையீட்டு மனுவானது தங்களுக்கெதிராக ஒரு தலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

ந.பரமேஸ்வரி
மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்

பொது அறிவிப்பு

டைகர் ஹோம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் (முன்னர் M/s. அதானி ஹவுசிங் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட், ஜூன் 6, 2024 தேதியிட்ட துவக்க சான்றிதழின் அடிப்படையில், நிறுவன விவகார அமைச்சகம், நிறுவனங்களின் பதிவாளர் அலுவலகம் வழங்கியது, இனி 'THFPL' என குறிப்பிடப்படும்), பதிவு அலுவலகம் : அதானி ஹவுஸ், 56, ஸ்ரீமாலி சொசைட்டி, நவரங்புரா, அகமதாபாத், 380009 மற்றும் அதன் கிளை அலுவலகம் : எண். 207, சாய் மிடாஸ் டச், 2வது தளம், சவேதி, அகமதுநகர் 414003 ஆகிய நாங்கள், திருமதி ஷீத்தல் தேவிதாஸ் பவாஷே (கடன்தாரர்) அவர்கள் எங்கள் நிறுவனத்திடமிருந்து வீட்டுக் கடனைப் பெற்று, கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசல் உரிமை ஆவணங்களை எங்கள் கிளையில் கீழ்க்கண்டவாறு டெபாசிட் செய்துள்ளார் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

1) மேற்கூறிய ஆவணங்கள் தொடர்பாக ஷீத்தல் தேவிதாஸ் பவாஷேக்கு ஆதரவாக ஆதேஷ் கன்ஸ்ட்ரக்ஷனால் (சுரேஷ் நம்தியோ லகாட்) வழங்கப்பட்ட 12/01/2024 தேதியிட்ட விற்பனைப் பத்திரம் எண் 473/2024, எங்களின் ஒரு கிளை அலுவலகமான டைகர் ஹோம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் — பழைய 16 & புதிய எண் 17 சிடிஎச் சாலை 1வது தளம், பாலாஜி நகர் திருமுல்லைவாயல் சாலை, அம்பத்தூர் சென்னை 600062லிருந்து ஆய்வுக்காக / எடுத்துச் செல்லப்பட்டபோது காணாமல் போய்விட்டது. இது தொடர்பாக 03.12.2024 அன்று தமிழ்நாடு காவல் நிலையத்தில் ஆவணங்கள் காணாமல் போனதாக புகார் அளிக்கப்பட்டது, இருப்பினும் அவற்றை கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே, யாரேனும் இதைக் கண்டெடுத்தால், அதை மேலே கூறப்பட்ட எங்கள் கிளை அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும் அல்லது 18002100444 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும் என்று இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிட்டவர்
ஒப்பம்/-
டைகர் ஹோம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
(முன்னர் M/s. **அதானி ஹவுசிங் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்**)

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 27பKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை – 400 051
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006. (வேண்ட் மார்க்: எம்ஜி கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரயில் நிலையம் அருகில்)

ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு. 'புல்லாடன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்' (இனி "FIHFCL" என்று குறிப்பிடப்படுகிறது) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 04.11.2024 அன்று கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் (இனி 'வங்கி/ கோம்பிஸி/ஈடுபெற்ற கடன் வழங்கியவர்' என்று குறிப்பிடப்படுகிறது) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) கவனத்தைக் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண்.6036072104326716ன் கீழ்; கீழே உள்ள விவரங்களின்படி **திரு. லலிதா எஸ், திரு. பாலாஜி ஆர்** & M/s. **திவா ஹிம் அண்ட் பிட்னஸ் ஸ்டுடியோ** ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 04.12.2024 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.56,56,218/–(ரூபாய் ஐம்பத்தாறு லட்சத்து ஐம்பத்தாறாயிரத்து இருநூற்று பதினெட்டு மட்டும்)** மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் "எங்கே எப்படி இருக்கிறதோ அப்படியே, எவ்வாறு உள்ளதோ அது போல்" வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விவரங்கள்	விவரங்கள்
ஏலத் தேதி	20.01.2025
ஏலம் நடைபெறும் நேரம்	மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்
ரிசர்வ் விலை	**ரூ. 23,50,000/– (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)**
டேவணித் தொகை டெபாசிட் (EMD)	**ரூ.2,35,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்)**
Kyc உடன் Emd ஐ சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	18.01.2025 அன்று மாலை 6:00 மணி வரை (இந்திய நேரப்படி)
ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம்	**அட்டவணை "A".** சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். காலி நிலத்தின் விஸ்தீரணம் 1,16,412 சதுர அடி அல்லது 2 ஏக்கர் 67 சென்ட் நிலத்தில் 1,04,733 சதுர அடி (ஒஎஸ்ஆர் நிலமாக மறைமலைநகர் நகராட்சிக்கு பரிசாக அளிக்கப்பட்ட 11,679 சதுரடி பரப்பளவை கழித்து) சர்வே எண்கள் 191/3B1 மற்றும் 191/4A, பட்டா எண். 2609 (பட்டா எண். 191/3b1 மற்றும் 191/4a படி) செங்குன்றம் கிராமம், செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்த நிலம் உள்ளது. அதன் எல்லைகள் : வடக்கு: சர்வே எண்.230–ல் உள்ள காலி நிலம், தெற்கு: செங்குன்றம் சாலை, கிழக்கு: சர்வே எண்கள்.191/4B,3B2, 3B3 மற்றும் 2A2 A1–ல் உள்ள சொத்து மேற்கு: ஒஎஸ்ஆர் நிலம் மறைமலைநகர் நகராட்சிக்கு வழங்கப்பட்டது. இந்த சொத்து செங்கல்பட்டு பதிவு மாவட்டத்திலும், செங்கல்பட்டின் இணை II சார் பதிவு மாவட்டத்திலும் அமைந்துள்ளது. **அட்டவணை "மீ".** (அபார்ட்மெண்ட் மற்றும் கவர்டு கார் பார்க்கிங் ஒதுக்கீட்டாளருக்கு ஒதுக்கப்பட்டது) எண்.A 108, முதல் தளம், பிளாக் "A"–ல் உள்ள 1,017 சதுர அடி சூப்பர் பில்டப் ஏரியா (பொதுப் பகுதிகளில் உள்ள விகிதாசார பங்கு உட்பட) மற்றும் பிரிவுபடாத பங்கு நிலம் 482.27 சதுர அடி மற்றும் அத்துடன் கீழ்தளத்தில் உள்ள கார் பார்க்கிங் உட்பட இந்த அபார்ட்மெண்ட் பெயர் "ரெயின் ட்ரீ பார்க்". இது அட்டவணை "A" நிலத்தில் உள்ளது.
தெரிந்தவரை வில்லங்கங்கள் : இல்லை	

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. ஷியாம் நம்பூரி (மொபைல் எண். +91 9677288418), திரு. விஷால் ஆதிசேஷன் (+91 9941016600)** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள ஏலதாரர் வங்கியின் IVR **எண் (+91 9152219751)ஐ** தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங்க் https://www.kotak.com/en/bank-auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : காஞ்சிபுரம், தேதி: 07.12.2024 **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

படிவம் ஏ

பொது அறிவிப்பு

(நொடிந்த நிலை மற்றும் இந்திய திவால் நிலை வாரியம் (தன்னிச்சையாக கலைத்தல் நடைமுறை) விதிகள் 2017ன் விதி 14)

SM TKC இந்தியா பிரைவேட் லிமிடெட்
பங்குதாரர்களின் கவனத்திற்கு

1	நிறுவன நபரின் பெயர்	SM TKC இந்தியா பிரைவேட் லிமிடெட்
2	நிறுவன நபரின் துவக்க தேதி	01.01.2019
3	எந்த அதிகாரத்தின் கீழ் நிறுவன நபர் துவக்கம்/பதிவு	ஆர்ஓசி– சென்னை
4	நிறுவன நபரின் நிறுவன அடையாள எண்/ வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண்.	U74999TN2019FTC134304
5	நிறுவன நபரின் பதிவு அலுவலக முகவரி மறும் பிரின்ஸ்பல் அலுவலக முகவரி (ஏதேனும் இருப்பின்)	சாம்சன் டவர்ஸ், 8வது தளம்,402&403 எல், பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை, தமிழ்நாடு– 600008
6	நிறுவன நபரின் கலைப்பு துவங்கப்பட்ட தேதி	29/11/2024 (29/11/2024 அன்று நடைபெற்ற அசாதாரண பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில் தன்னிச்சையாக கலைப்பு தொடங்குவதற்கான தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது, இருப்பினும் அனைத்து பங்குதாரர்களாலும் தீர்மானங்களின் கையொப்பமிடப்பட்ட நகல் 05/12/2024 அன்று பெறப்பட்டது)
7	கலைப்பலுவலரின் பெயர், முகவரி, இமெயில் முகவரி, தொலைபேசி எண் மற்றும் பதிவு எண்.	பெயர்: AAA இன்சால்வென்சி ப்ரொபஷனல்ஸ் LLP (அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி அதாவது அங்கித் கோயல் மூலம்) IBBI பதிவு எண்: IBBI/IPE-0002/1PA-1/2022-23/50001 மின்னஞ்சல் முகவரி: ankitgoel@aaainsolvency.com. info@aaainsolvency.com முகவரி: AAA ஹவுஸ், 64, ஒக்லா எஸ்டேட் மார்க், மோடி மில்ஸ் அருகில், ஒக்லா பேஸ் III, ஒக்லா இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், புதுடெல்லி–110020 தொலைபேசி எண்: 011 4666 46220
8	கோரிக்கைகளை சமர்ப்பிக்க கடைசி தேதி	29/12/2024

M/s. SM TKC இந்தியா பிரைவேட் லிமிடெட் 29/11/2024 அன்று தன்னிச்சையான கலைப்பு நடவடிக்கைகளை துவங்கியது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. மேற்கண்ட அறிப்பில் 76) குறிப்பிடப்பட்டுள்ள கலைப்பலுவலர் முகவரிக்கு SM TKC இந்தியா பிரைவேட் லிமிடெட்டின் பங்குதாரர்கள் தங்களின் உரிமை கோரல்களை ஆதாரத்துடன் 29/12/2024 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிதி கடன் வழங்கியவர்கள் ஆதாரத்துடன் மின்னணு மூலம் மட்டுமே தங்களின் உரிமை கோரல்களை சமர்ப்பிக்க வேண்டும். மற்ற அனைத்து பங்குதாரர்கள் ஆதாரங்களுடன் கூடிய தங்களது உரிமை கோரல்களை நேரடியாகவோ தபால் மூலமோ அல்லது மின்னணு மூலமாகவோ சமர்ப்பிக்கலாம். தவறான வழியில் உரிமை கோரலுக்கான அத்தாட்சியை சமர்ப்பித்தால் அபராதம் விதிக்கப்படும்.

AAA இன்சால்வென்சி ப்ரொபஷனல்ஸ் LLP சார்பாக
ஒப்பம்/–
திரு. அங்கித் கோயல்
அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி மற்றும் கையொப்பமிட்டவர்
AAA இன்சால்வென்சி ப்ரொபஷனல்ஸ் LLP
IBBI பதிவு எண்: IBBI/IPE-0002/1PA-1/2022-23/50001

நாள்: 06/12/2024
இடம்: புதுடெல்லி

M/S SM TKC இந்தியா பிரைவேட் லிமிடெட் விஷயத்தில் கலைப்பலுவலர்

பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம்: செரிப்ரம் ஐடி பார்க் B2 பில்டிங், 5வது தளம், கல்யாணி நகர், புனே, மகாராஷ்டிரா 411014
கிளை அலுவலகம்: பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், கீழ் தளம், சேட்டோ டி அம்பா, எண்.37, நெல்சன் மாணிக்கம் சாலை, சென்னை – 600 029
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி விவரங்கள்: பெயர் : ரதீஷ் ராமச்சந்திரன், Email ID: Rathish.ramachandran@bajajfinserv.in, Mob No. 9940155459 & 8778385461/ 8669189048

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன் கீழ் ('சட்டம்') அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்னணு ஏலத்திற்கான பொது அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்/உடன் கடன்தாரர் பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ('BHFL')க்கு கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்தை அடமானம் வைத்துள்ளார் என்று இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. SARFAESI சட்டம் 2002 மற்றும் அங்குள்ள விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் மேற்கூறிய அசையா சொத்து ('பாதுகாக்கப்பட்ட சொத்து/சொத்து') கையகப்படுத்தப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி BHFLக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை, பொருந்தக்கூடிய வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றை பெறுவதற்காக பாதுகாக்கப்பட்ட சொத்து பொது ஏலத்தின் மூலம் விற்கப்படும். கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், விதி எண் 8 மற்றும் 9ன் கீழ் (இனிமேல் விதிகள் என குறிப்பிடப்படுகிறது) பாதுகாக்கப்பட்ட சொத்து விற்பனை மற்றும் "எங்கே இருக்கிறதோ அதுபோல்", "எதுவாக இருந்தாலும்", "எப்படி இருந்தாலும்" மற்றும் "ஆதாரம் இல்லாத" அடிப்படையில்" 08 **ஜனவரி, 2025** அன்று ஏலம் நடைபெறும். மற்றும் அதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

கடன் கணக்கு விவரங்கள்/ கடன்தாரர்/கள் & உத்தரவாத தாரர்கள் பெயர் மற்றும் முகவரி	1. மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம் 2. EMDஐ சமர்ப்பிக்க கடைசித் தேதி 3. சொத்தை பார்வையிடுவதற்கான தேதி மற்றும் நேரம்	1. ரிசர்வ் விலை 2. சொத்துக்கான EMD 3. ஏல அதிகரிப்பு
LAN: 403TSH61966067, 403HSL61966062 **1.பார்த்தசாரதி கே எஸ் (கடன்தாரர்)** எண்.84 ராயர் பிளாட்ஸ் S1 2வது தளம், டெல்லஸ் அவென்யூ பேஸ் 2, ராஜாகீழ்பாக்கம், சேலையூர், சென்னை 600073 , **2.ராகேந்து வதனா (உடன் கடன்தாரர்)** B4 டெல்லஸ் அவென்யூ, ராஜாகீழ்பாக்கம் செம்பாக்கம், சேலையூர், சென்னை 600073 28/11/2024 அன்று மொத்த நிலுவைத் தொகை: ரூ.85,04,909/– (ரூபாய் எண்பத்து ஐந்து லட்சத்து நாலாயிரத்து தொள்ளாயிரத்து ஒன்பது மட்டும்) மற்றும் எதிர்கால வட்டி மற்றும் சேர்ந்துள்ள கட்டணங்கள்.	1. **மின்னணு ஏலத் தேதி** 8 ஜனவரி, 2025 அன்று காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை, 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன் 2. **கேஒய்சி உடன்** EMDஐ **சமர்ப்பிக்க கடைசித் தேதி** 7 ஜனவரி, 2025 அன்று மாலை 5.00 மணி வரை (இந்திய நேரப்படி) 3. **சொத்தை பார்வையிடுவதற்கான தேதி** 08.12.2024 முதல் 05.01.2025 வரை காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை (இந்திய நேரப்படி)	**ரிசர்வ் விலை :** ரூ.51,30,000/- (ரூபாய் ஐம்பத்தோரு லட்சத்து முப்தாயிரம் மட்டும்) EMD : ரூ.5,13,000/- (ரூபாய் ஐந்து லட்சத்து பதிமூன்றாயிரம் மட்டும்) ரிசர்வ் விலையில் 10% **ஏல அதிகரிப்பு** ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) மற்றும் அதன் மடங்குகளில்
LAN: 403HSLED790996, 403TSHED927890, 403TSHEE079513 **1.டி கடலைமணி (கடன்தாரர்)** மனை எண் 94, ஸ்ரீ சாய் அபார்ட்மெண்ட், எப்1 மெட்ரோ ஸ்டார் சிட்டி, 1வது பிரதான சாலை, மணிகண்டா நகர், சென்னை, தமிழ்நாடு 600069 28/11/2024 அன்று மொத்த நிலுவைத் தொகை: ரூ.51,06,293/ (ரூபாய் ஐம்பத்தோரு லட்சத்து ஆறாயிரத்து இருநூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்) மற்றும் எதிர்கால வட்டி மற்றும் சேர்ந்துள்ள கட்டணங்கள்.	1. **மின்னணு ஏலத் தேதி** 8 ஜனவரி, 2025 அன்று காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை, 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன் 2. **கேஒய்சி உடன்** EMDஐ **சமர்ப்பிக்க கடைசித் தேதி** 7 ஜனவரி, 2025 அன்று மாலை 5.00 மணி வரை (இந்திய நேரப்படி) 3. **சொத்தை பார்வையிடுவதற்கான தேதி** 08.12.2024 முதல் 06.01.2025 வரை காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை (இந்திய நேரப்படி)	**ரிசர்வ் விலை :** ரூ.33,10,000/- (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து பத்தாயிரம் மட்டும்) EMD : ரூ.3,31,000/- (ரூபாய்